# இல்ல/குடும்ப வன்முறை மற்றும் ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டம்




## சட்டத்திற்கான ஒரு வழிகாட்டி

‘குடிவரவு ஆலோசனை மற்றும் உரிமைகள் மையங்கள்’ (Immigration Advice and Rights Centre Inc.,) என்ற அமைப்பின் இயக்குநரும் தலைமைச் சட்டதரணியும், ஆஸ்திரேலியக் குடிவரவு, அகதியர் மற்றும் குடியுரிமைச் சட்டம் பற்றிய எளிய வழிகாட்டியுமான *The Immigration Kit, 8th Edition* எனும் உபகரணத்தின் ஆசிரியரும் உப எழுத்தாளருமான சுஹத் கமண்ட் என்பவரால் இக் குறுநூல் எழுதப்படுகிறது.

நி.ச.வே. அரசாங்க முதலமைச்சர் துறை மற்றும் மந்திரிசபையின் ‘பெண்களுக்கான கொள்கைத் திட்ட அலுவலக’ (Office For Women’s Policy, NSW Department of Premier and the Cabinet) த்தின் உதவி மற்றும் நிதியுதவியினால் ஆங்கிலமல்லாத மொழிகளில் இக் குறுநூல் மொழிபெயர்க்கப்படுவது சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் உறை மீது காணப்படும் சித்திரம் க்ரெக் கால் (Greg Gaul) என்பவரால் வரையப்பட்டது.

# முக்கியம்!

**இந்தக் குறுநூலில் அடங்கியுள்ள தகவல்கள் ஜனவரி, 12, 2009 அன்று நடப்பிலிருக்கிறது, மற்றும் இல்ல/குடும்ப வன்முறையினால் ஏற்படும் குடிவரவுச் சட்டங்கள் குறித்த சிக்கல்களைக் கையாளுவது எப்படி என்பதற்கான வழிகாட்டியாகவே இது பயன்படுத்தப்பட வேண்டும். இந்த நூல் ஒரு வழிகாட்டி என்ற முறையிலேயே பயன்படுத்தப்பட வேண்டும், மற்றும் திறமையுள்ள, பதிவுசெய்யப்பட்ட ஒரு புலப்பெயர்வு முகவரால் வழங்கப்படும் தொழிலமை சார்ந்த அறிவுரைக்கு பதிலாக இது எடுத்துக்கொள்ளப்படக் கூடாது. இந்நூலைப் படிப்போருக்கு இதன் சில பகுதிகள் புரியாமல் இருக்கலாம். நியூ சவுத் வெய்ல்ஸ் மாநிலத்தில் வாழும் அப்படிப்பட்டோருக்கு மேலதிக அறிவுரை/உதவி தேவைப்பட்டால் (02) 9279 4300 எனும் இலக்கம் மூலம் ‘குடிவரவு ஆலோசனை மற்றும் உரிமைகள் மையங்கள்’ (Immigration Advice and Rights Centre Inc.) எனும் அமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம். குடிவரவு உதவி நாடும் மற்ற மாநிலங்களில் வசிக்கும் வாசகர்கள் தமக்கு அண்மையில் சட்ட மையம் எங்குள்ளது என அறியும் பொருட்டு தமது உள்ளூர் சட்ட உதவி ஆணையத்தினையோ அல்லது ‘சமூக சட்ட மையங்களுக்கான தேசீய அமை’ (National Association of Community Legal Centres) ப்பையோ (02) 9264 9595 எனும் எண் மூலம் அணுகவும்.**

IARC

**Immigration Advice and Rights Centre Inc.**

ABN: 45 808 320 822
Community Legal Centre, established in 1986

Level 5, 362 Kent Street Sydney NSW 2000
**Ph:** +61 2 9279 4300 (Admin Line, 9-5pm)
+61 2 9262 3833 (Advice Line, Tues & Thurs 2-4pm)
**Fax:** +61 2 9299 8467
**Email:** iarc@iarc.asn.au
**Web:** www.iarc.asn.au

# உள்ளடக்கம்

1. ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டத்தில் உள்ள DV/FV சட்டவசதி முறைகள் என்ன?......... 3

2. எந்த விசாக்களுக்கு இவ - குவ சட்டவசதி முறைகள் செல்லுபடியாகும்?........................ 4

3. இவ-குவசட்டவசதிகள் செல்லுபடியாகும் சூழ்நிலைகள் ............................................ 4

3.1 வாழ்க்கைத்துணைவர்/துணைவிக்கான விசா வழங்கப்படும் விதம் ............................................ 5

3.2 இவ - குவ விதிமுறைகளைப் பயன்படுத்துதல் ............................................................. 7

4. உண்மையான உறவு .......................................................................... 9

5. யார் 'பாதிக்கப்பட்டவராய் சொல்லப்படுபவர்' ஆகலாம்? ............................................ 9

6. யார் 'குற்றம் இழைத்ததாய் சொல்லப்படுபவர்' ஆகலாம்? ................................. 9

7. விண்ணப்பதாரர் அவருக்கு ஏற்பாதரவளிப்பவ ருடனோ அல்லது 'குற்றம் இழைத்தவராய் சொல்லப்படுபவர்' உடனோ இன்னும் வாழ்ந்துகொண்டிருந்தால ................................ 10

8. உறவு முடிவுறும் போது விண்ணப்பதாரருக்கு ஏற்படும் கடமைகள் ........................................... 10

9. DV/FV-யை நிருபித்தல் - விதிமுறைகள் ...................................................... 10

9.1 சட்டப்படியான சாட்சி ........................................................................ 11

9.2 சட்டம் சாராத சாட்சி ........................................................................ 11

9.3 'ஏற்கத்தக்க இல்ல வன்முறை' / 'ஏற்கத்தக்க குடும்ப வன்முறை' ............................................ 12

9.4 'தகுதி வாய்ந்த நபர்' என்பது யார்? ........................................................... 13

9.5 சட்டப்படியான வாக்குமூலங்க ளில் எது அடக்கமாக வேண்டும்? ............................................ 13

9.6 சட்ட வாக்குமூலப் படிவம் *(Form 1040)* ............................................................ 15

9.7 தாக்குதல் குறித்த காவல்துறைப் பதிவு ............................................................ 15

10. DV/FV நிருபிக்கப்பட்டால் ............................................................ 15

11. DV/FV நிருபிக்கப்படாவிட்டால் ............................................................ 15

12. ஏற்கத்தக்க DV/FV- யினை பாரபட்சமற்ற முறையில் மதிப்பிடல் .............................. 16

13. எங்கு உதவி நாடுவது? ............................................................ 16

13.1 பாதுகாப்பு,/ புகலிடம்/ மொழி உதவி ............................................................ 17

13.2 DV/FV குறித்த இலவச குடிவரவு உதவி ............................................................ 17

13.3 பொதுவான சட்ட உதவி ............................................................ 18

13.4 தேசீய உதவித் தொலைபேசி இணைப்புகள் ............................................................ 18

13.5 அரசாங்கத் துறைகள் ............................................................ 18

# இல்ல/குடும்ப வன்முறை மற்றும் (DV/FV[1]) ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டம்

## புள்ளிவிவரங்கள்/சுருக்கவிவரம்

**குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறையின் 2007 – 8-ஆம் ஆண்டின் வருடாந்திர அறிக்கையின்படி அந்த ஆண்டிற்கான DV/FV கோரல்கள் (claims) பற்றிய புள்ளிவிவரங்கள் கீழ்வருவனவற்றைக் காட்டுகின்றன:**

- நாடு தழுவி DV/FV சம்பந்தமாக 502 கோரல்கள் (குடிவரவு சூழ்நிலைகளில்) செய்யப்பட்டன.
- ஜுன் 30, 2008 அன்று மொத்த கோரல்களின் 15 சதவீதத்துக்கும் சிறிது குறைவாக - அதாவது 74 பரிந்துரைப்புகள் (referrals) சென்ட்டர்லிங்க்- கிற்கு (பாரபட்சமற்ற DV/FV மதிப்பீட்டிற்கென) செய்யப்பட்டன.
- ஜுன் 30, 2008 வரை சென்ட்டர்லிங்க்-கினால் முடிவு செய்யப்பட்ட 61 பரந்துரைப்புகளில் DV/FV நிகழ்ந்திருந்தது என்பதைக் காட்டும் 40 கண்டுபிடிப்புகளும், நிகழவில்லை என்று காட்டும் 21 கண்டுபிடிப்புகளும் இருந்தன.
- 'புலப்பெயர்வு மீளாய்வு மன்றா' (Migration Review Tribunal) த்தினால் சென்ட்டர்லிங்க்-கிற்கு பரிந்துரைக்கப்பட்ட மேலதிகமான 49 பரிந்துரைப்புக்களில் DV/FV நிகழ்ந்திருந்தது என்பதைக் காட்டும் 19 கண்டுபிடிப்புகளும், நிகழவில்லை என்று காட்டும் 26 கண்டுபிடிப்புகளும் இருந்தன.
- திணைக்கள அளவில் பார்க்கும்பொழுது, எந்த ஒரு நிதியாண்டிலும் ஏறத்தாழ 65 சதவீத DV/FV கோரல்களில் நிரந்தர விசா வழங்கப்படும் முடிவு (தமது விசா உபபிரிவுக்கு ஏற்ப சட்டப்படியான அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையில்) எடுக்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் புலப்பெயர்வுத் திட்டத்தினைப் பொதுவாய் நோக்கும்போது செய்யப்படும் DV/FV கோரல்கள்மிகவும் குறைவாகும். வழங்கப்படும் சட்ட வசதிகள் மிகக் குறைந்த அளவிலேயே துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்பதைக் காட்டும் சான்றாக இது நோக்கப்படலாம். இருப்பினும், அதே வேளையில், ஆஸ்திரேலியாவின் புலப்பெயர்வுத் திட்டத்தில் பங்குபெறுவோரில் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலையில் இருப்போருக்கு இப்படிப்பட்ட DV/FV சட்ட வசதிகள் நடப்பில் இருப்பது தெரியாமல் இருக்கக் கூடும். குடிவரவுச் சட்டத்தில் DV/FV வசதிகள் இருப்பது குறித்த விழிப்புணர்வினை மேம்படுத்துவதும், இந்த சட்ட வசதிகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதற்கு வழிகாட்டியாய் அமைவதுமே இந்தச் சிறு நூலின் நோக்கமாகும்.

## 1. ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டத்தில் உள்ள DV/FV சட்டவசதி முறைகள் என்ன?

*'புலப்பெயர்வு கட்டுப்பாடுகள்'* (Migration Regulations) சட்டத்தின்1.5-ஆம் பிரிவில் (கட்டுப்பாட்டு விதிகள் 1.21 – 1.27) காணப்படும் குடும்ப வன்முறை (DV/FV) சட்டவசதிகள் ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டத்தின் கீழ் DV/FV நிகழ்ந்துள்ளதாய்க் கருதப்படுகிறதா என்பதைத் தீர்மானிக்கும் 'கருதுவதற்கான உரிமை வசதிகள்' (deeming provisions) ஆகும். DV/FV நிகழ்ந்திருந்தால், மற்றும் விண்ணப்பிக்கப்பட்டுள்ள அல்லது வைத்திருக்கும் விசாவிற்கு DV/FV சட்டவசதிகள் செல்லுபடியாகும் என்றால் (பார்க்க: அத்தியாயங்கள் 2 மற்றும் 3), விசாவிற்கு விண்ணப்பித்துள்ளவர் அல்லது விசா வைத்திருப்பவருக்கு, விசா வழங்கப்படுவதற்கான அடிப்படை உறவுமுறை துண்டிக்கப்பட்டிருப்பினும், நிரந்தர விசா வழங்கப்படலாம்.

நிரந்தரக் குடியுரிமை பெற வேண்டும் என்பதற்காக குடும்ப வன்முறை (DV/FV) க்குப் பலியான விசா விண்ணப்பதாரர்கள் தொடர்ந்து தம்மைத் துன்புறுத்தும் வாழ்க்கைத்துணைவர்களுடன் வாழவும், அவர்களைச் சார்ந்திருக்கவும் தேவையில்லை என்பதைக் காட்டும் வகையில் அவர்களுக்கு ஒரு வழியினை வகுத்துக் கொடுப்பதே DV/FV சட்டவசதிகளின் நோக்கமாகும்.

*'புலப்பெயர்வு கட்டுப்பாடுகள்'* (Migration Regulations) சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்று கண்டறியப்பட்டாலும் இது குற்றமாய்க் கருதப்படவேண்டிய அவசியமில்லை மற்றும் தீங்கிழைத்ததாய்க் கருதப்படுபவருக்குத் தண்டனையில் இது முடியவேண்டும் என்ற அவசியமும் இல்லை.

[1] அக்டோபர் 15, 2007-க்குப் பிறகு சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்களுக்கு புதிய வார்த்தைப் பதங்களும், 'குடும்ப வன்முறை' ('Family Violence') எனும் பதத்தின் அர்த்தமும் செல்லுபடியாகும். அக்டோபர் 15, 2007-க்கு முன்பாய்ச் சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்களுக்கு பழைய வார்த்தைப் பதங்களும், 'இல்ல வன்முறை' (Domestic Violence') என்ற பதத்தின் அர்த்தமும் செல்லுபடியாகும். அத்தியாயம் 9.3-ல் இக் கருத்துக்கள் மேலும் விளக்கப்படுகின்றன.

## 2. எந்த விசாக்களுக்கு DV/FV சட்டவசதி முறைகள் செல்லுபடியாகும்?

தற்சமயம் கீழ்வரும் உபபிரிவு விசாக்களுக்கான விண்ணப்பங்களுக்கு மட்டுமே DV/FV சட்டவசதி முறைகள் செல்லுபடியாகும்

| விசா உபபிரிவு எண் | விசா உபபிரிவின் பெயர் |
|---|---|
| 100 | வாழ்க்கைத் துணைவர் துணைவி (கடல் தாண்டி நிரந்தரம்) |
| 110 | ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் (கடல் தாண்டி நிரந்தரம் -பொதுவாக ஒரு பாலின உறவுகள்) |
| 445 | சார்ந்துவாழும் பிள்ளை |
| 801 | வாழ்க்கைத் துணைவர் துணைவி (நாட்டில் இருப்பவர் நிரந்தரம்) |
| 814 | ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் (நாட்டில் இருப்பவர் நிரந்தரம் -பொதுவாக ஒரு பாலின உறவுகள்) |
| 820 | வாழ்க்கைத் துணைவர் துணைவி (தற்காலிகம் நாட்டில் இருப்பபவர் |
| 826 | ஒருவரையொருவர் சார்ந்திருத்தல் (தற்காலிகம் நாட்டில் இருப்பவர் பொதுவாக ஒரு பாலின உறவுகள்) |
| 845 | ஆஸ்திரேலியாவில் ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தகம் |
| 846 | மாநிலம்/எல்லைப்பகுதியால் Sponsor செய்யப்பட்ட ஆஸ்திரேலிய மண்டலப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட வர்த்தகம் |
| 855 | தொழிலாளர் உடன்படிக்கை |
| 856 | வேலை தருவோரால் முன்மொழியப்படும் திட்டம் |
| 857 | மண்டலப்பகுதி- Sponsor செய்யப்படும் புலப்பெயர்வுத் திட்டம் |
| 858 | சிறப்புத் திறன் |

ஒவ்வொரு வகை விசாவுக்கும் DV/FV சட்டவசதிகள் எப்படிப் பொருந்துகின்றன என்பதில் சிறிது வேறுபாடு உண்டு. ஆஸ்திரேலியப் புலப்பெயர்வுச் சட்டத்தில் பொதுவாக DV/FV கோரல்கள் மேற்கொள்ளப்படும் வாழ்க்கைத்துணை விசாக்கள் சம்பந்தமாக DV/FV சட்டவசதிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையே இவ்வெளியீடு பிரதானமாக நோக்குகிறது.

## 3. DV/FV சட்டவசதிகள் செல்லுபடியாகும் சூழ்நிலைகள

ஆஸ்திரேலியப் புலப்பெயர்வுச் சட்டத்தின் கீழ் வாழ்க்கைத்துணைவர் விசாக்கள் பெதுவாக 2 அல்லது 3 நிலைகளில் வழங்கப்படுகின்றன (கீழே 3.1- ஐப் பார்க்க). பொதுவாக, நிரந்தர விசா வழங்கப்படுவது விசா வழங்கும் செயல்முறையின் கடைசி கட்டமாகும். விசாவுக்கான அடிப்படைத் தகுதியாய்க் கருதப்படும் உறவுமுறையானது விசா வழங்கப்படுவதற்கு முன்பே முடிவுற்று இருப்பின், கீழேயுள்ள (a), (b) அல்லது (c) செல்லுபடியாகும் வேளையில் நிரந்தர விசா ஒன்று பொதுவாய் வழங்கப்படலாம். FV/DV நிகழ்ந்திருந்து, (b) அல்லது (c) –யும் பொருந்தும் என்றால் FV/DV-யின் மீது சார்ந்திருப்பதை விட (b) அல்லது (c)-யை நிரூபிப்பது எளிதானதாக இருக்கலாம் என்பதைக் கவனிக்கவும். (a), (b) அல்லது (c) ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று நடந்துள்ளது என நிரூபிப்பதுதான் அவசியம்.

### (a) உறவுமுறை முடிவுறுகிறது மற்றும் FV/DV -யும் இருக்கிறது

**அல்லது**

**(b) உறவுமுறை முறிதல் மற்றும் உங்களுக்கு ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவர் (sponsoring spouse) இறந்திருக்கும் நிலை** - ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவர் (sponsoring spouse) இறந்துவிட்டார் என்ற காரணத்தினால் விசா வழங்கப்படவேண்டும் எனில் அப்படிப்பட்ட இறப்பு நிகழ்ந்திருக்கவில்லையென்றால் விண்ணப்பதாரிக்கும், அவருக்கு ஏற்பாதரவு அளித்தவருக்கும் இடையே உள்ள உறவு தொடர்ந்திருக்கும் என்று விசா குறித்து முடிவு எடுப்பவர் (decision-maker) நம்ப வேண்டும். ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவர் இறப்பதற்கு முன்னரே உறவுமுறை முடிவுற்றதற்கான சான்று இருந்தால் இத்தகுதி முற்றுப்பெறாது.

ஆஸ்திரேலியாவில் தாம் நல்ல வர்த்தக, கலாச்சார அல்லது சொந்தத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர், அதாவது அப்படிப்பட்ட தொடர்புகளை உருவாக்கி, வலுப்படுத்திக்

கொண்டுள்ளனர் என்பதை விண்ணப்பதாரர் காண்பிக்கவேண்டியது பொதுவாய்அவசியம். குடிவரவுத் துறையின கொள்கை திட்டங்கள் கீழ்வரும்வழிகாட்டும் தகவல்களைத் தருகிறது.

- சொத்துக்கு உரிமையாளராய் இருத்தல் அல்லது ஆஸ்திரேலியப் பங்குதாரர்களுடன் வர்த்தகம் ஒன்றைக் கொண்டிருப்பது ஆகிய வடிவில் **வர்த்தகத் தொடர்புகள்** (business ties) இருக்கலாம். இந்த நிலையில் எடுக்கப்படும் முடிவு சாதகமற்றது என்றால் (refusal decision) வர்த்தகத் தொடர்புகளின் மீது இதன் தாக்கம் எப்படி இருக்கும் என்பது வர்த்தகத் தொடர்புகளை மதிப்பீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்படவேண்டியதாக இருக்கலாம்.
- கலைகள், இசை, இலக்கியம் (ஆனால் இவை மட்டும் அல்ல) மற்றும் அப்படிப்பட்ட கலாச்சார நடவடிக்கைகளில் விண்ணப்பதாரரின் பங்கின் அளவு மற்றும் அதன் தன்மை ஆகியவற்றை **கலாச்சாரத் தொடர்புகள்** (cultural ties) அடக்கும்.
- **சொந்தத் தொடர்புகள்** என்பது நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பருடனும், விண்ணப்பதாரரது சமூகத் தொடர்புகளின் தன்மையுடனும் அதன் விஸ்தாரத்துடனும் சம்பந்தப்பட்டது.

**அல்லது**

**(c) தொடர்புறவு முடிவடைந்துவிட்டது, மற்றும் குழந்தைகள் உள்ளனர்** - நிரந்தரக் குடியுரிமை வழங்கப்படுவதற்கு முன்பு குழந்தைகள் இருக்கும் நிலையில் உறவு முறிந்துபோனால், விசா வைத்திருப்பவர்/விண்ணப்பித்திருப்பவர் நிரந்தர விசா வழங்கப்படுவதற்கான தகுதிகொண்டவராக இருக்கலாம். குழந்தைகள் குறித்த ஏற்பாடுகள் சம்பந்தமாக குடிவரவுத் துறைக்குக் கீழ்வருவது போன்ற சான்றுகள் அளிக்கப்படவேண்டும்:

- சம்பிரதாயமற்ற உடன்பாடு ஒன்றைத் தாம் ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும், மற்றும் தமது பிள்ளைவளர்ப்பு பொறுப்புக்க (parenting responsibilities) ளின் தன்மையை எடுத்துக்காட்டும் ஒவ்வொரு பெற்றோரிடமிருந்தும் பெறப்பட்ட சட்டப்படியான வாக்குமூலம்: மற்றும்/அல்லது
- பெற்றோருக்கிடையேயான ஒப்பந்தத்தை சம்பிரதாயப்படுத்தும் ஆமோதிப்பு உத்திரவு (consent order).
  - o நீதிபதி ஒருவரால் ஏற்படுத்தப்பட்டது போன்ற சட்ட வலு இந்த உத்திரவுக்கு இருக்க வேண்டும், அல்லது
  - o 1975-ஆம் ஆண்டின் குடும்ப சட்ட *(Family Law Act 1975)* த்தின் பகுதி 64B(1) -இன் கீழ் ஏற்படுத்தப்பட்ட பிள்ளைவளர்ப்பு உத்திரவு.

*Srour v MIMA* [2006] *FCA 1228* என்ற வழக்கை வைத்துப் பார்க்கும் போது குழந்தைகள் குறித்த மேற்கண்ட நடைமுறையானது மிகவும் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கலாம். நீதிமன்ற உத் திரவு ஒன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான ஆதாரம் இருந்தாலொழிய பெற்றோர் ஒருவருக்கு சட்டப்படி தமது பிள்ளளையைப் பராமரிக்கும் பொறுப்புக்கள் உண்டு என்று இந்த வழக்கில் காணப்பட்டது.

## 3.1 வாழ்க்கைத்துணைவர் விசா செயல்முறையின் பகுதிகள்

வாழ்க்கைத்துணைவர் விசா செயல்முறையானது பொதுவாக 2 அல்லது 3 நிலைகளில் நிகழும் (அதாவது நிரந்தரக் குடியுரிமை பெறுவதில் 2 அல்லது 3 நிலைகள் உள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் நிரந்தர விசா ஒரே நிலையில் வழங்கப்படலாம்.[2].

---

[2] ஆண்டுகளுக்கு தற்காலிக வாழ்க்கைத்துணைவர் விசா வைத்திருக்காமல் ஒரே நிலையில் விண்ணப்பதாரருக்கு நிரந்தர விசா வழங்கப்படுவதற்கான சூழ்நிலைகளில் பின்வருவன அடங்கும்:

- விண்ணப்பதாரர் மனிதாபிமான விசாவில் இருக்கும் ஒருவரது வாழ்க்கைத்துணைவர் என்பதாதல் அவருக்குத் தற்காலிக விசா வழங்கப்பட்டது , மற்றும் ஏற்பாதரவளிப்பவர் (sponsor) இந்த வாழ்க்கைத்துணை உறவினை குடிவரவுத் துறைக்கு மனிதாபிமான விசா வழங்கப்படுவதற்கு முன்பே தெரிவித்திருந்தார். உபபிரிவு 309/100 விசா விண்ணப்பதாரிகளுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு பொருந்தும், உபபிரிவு 820/801 விண்ணப்பதாரிகளுக்கு அல்ல.
- உறவுமுறை நீண்டகாலமாய்த் தொடர்கிறது, அதாவது சோடியின் திருமண உறவானது குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாய்த் தொடர்ந்திருக்கிறது, அல்லது தமது உறவின் மூலமாகப் பிறந்து அவர்களைச் சார்ந்து வாழும் குழந்தைகள் இருப்பின் இரண்டு வருட காலமாக அவர்கள் சேர்ந்து வாழ்ந்திருக்க வேண்டும் (மாற்றாம்-பிள்ளைகள் இதில் அடங்காது). விசாவுக்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படவேண்டும்.

# 3 நிலை செயல்முறை

| | | | | |
|---|---|---|---|---|
| மணம் நிச்சயிக்கப்பட்ட துணைவர் விசா sc 300 | ➔ | வாழ்க்கைத் துணைவர் தற்காலிக விசா sc 820 | ➔ | வாழ்க்கைத்துணைவர் நிரந்தர விசா sc 801 |

**கவனிக்க: 'sc' = Subclass**

3 நிலைச் செயல்முறைகளுக்கு:

1. பொதுவாய் மணம் நிச்சயிக்கப்பட்டவருக்கான விசா 9 மாத காலத்திற்கு வழங்கப்படும். இந்த விசா வைத்திருப்பவர் இந்த 9 மாதகாலத்திற்குள் ஆஸ்திரேலியாவுக்கு வந்து அவரது ஏற்பாதரவாளரை (sponsor) மணக்க வேண்டும்.

2. சோடிக்கு மணம் முடிந்தவுடன் மணம் நிச்சயிக்கப்பட்டவருக்கான விசா (Fiancé Visa) விலிருப்பவர் நாட்டுக்குள் இருந்து செய்யயப்படும் வாழ்க்கைத்துணைவர் விண்ணப்பத்தினை (onshore spouse application) ச் சமர்ப்பிப்பார் (உபபிரிவு 820/801). இது ஏற்கப்பட்டால், பொதுவாக இரண்டு ஆண்டு காலத்திற்கு வாழ்க்கைத்துணைவருக்கான தற்காலிக விசா ஒன்று வழங்கப்படும். தற்காலிக விசா வழங்கப்படும் முன் (அல்லது சமர்ப்பிக்கப்படும் முன்) உறவு முறிந்துபோனால், மேலே உள்ள அத்தியாயம் 3- ல் சொல்லப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்று பொருத்தமானதாயிருந்தால் (அதாவது ஏற்பாதரவாளரது மரணம், குழந்தை உள்ள நிலை அல்லது DV/FV நிகழ்ந்திருத்தல்) விசா வழங்கப்படலாம்.

3. விசாவில் இருப்பவர் இத் தற்காலிக வாழ்க்கைத்துணை விசாவை ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் வைத்திருந்த பிறகு விசா வழங்கப்படுவதற்கு அடிப்படையாய் இருந்த உறவினை குடிவரவுத்துறை மீண்டும் மதிப்பீடு செய்யும், மற்றும் இந்த உறவு தொடர்ந்துகொண்டிருந்தால் பொதுவாக நிரந்தர வாழ்க்கைத்துணைவர் விசாவினை (உடல்நலம், நன்னடத்தை மற்றும் இதர பொதுநலத் தேவைக்கட்டளைகள் (Public Interest Criteria) பூர்த்தி செய்யப்பட்டால்) வழங்கும். உறவு முடிவுற்றிருந்தால், மேலே உள்ள அத்தியாயம் 3- ல் சொல்லப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்று பொருத்தமானதாயிருந்தால்தான் (அதாவது ஏற்பாதரவாளரது மரணம், குழந்தை உள்ள நிலை அல்லது DV/FV நிகழ்ந்திருத்தல்) விசா வழங்கப்படலாம்.

# 2 கட்டச் செயல்முறை

| தற்காலிக வாழ்க்கைத்துணைவர் விசா | ➔ | நிரந்தர வாழ்க்கைத்துணைவர் விசா |
|---|---|---|
| நாட்டிலிருக்கும் வாழ்க்கைத்துணைவர் | | |
| sc820 | ➔ | sc801 |
| நாட்டிற்கு வெளியே இருக்கும் வாழ்க்கைத்துணைவர் | | |
| sc309 | ➔ | sc100 |
| நாட்டிற்குள் ஒருவரைஒருவர் சார்ந்திருத்தல் | | |
| sc826 | ➔ | sc814 |
| நாட்டிற்கு வெளியே ஒருவரைஒருவர் சார்ந்திருத்தல் | | |
| sc310 | ➔ | sc110 |

2 கட்டச் செயல்முறையில் நடப்பது:

1. ஆஸ்திரேலியாவிற்கு உள்ளோ (onshore) அல்லது வெளியிலோ (offshore) இருக்கும் விண்ணப்பதாரர் ஒருவரால் வாழ்க்கைத்துணைவர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படலாம். இது நிரந்தர மற்றும் தற்காலிக வாழ்க்கைத்துணை விசாவுக்கான விண்ணப்பம் ஆகும். விண்ணப்பம் ஏற்கப்பட்டால், இரண்டு வருட

காலத்திற்கான தற்காலிக வாழ்க்கைத்துணை விசா ஒன்று பொதுவாக வழங்கப்படும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு, ஆனால் விசா வழங்கப்படும் முன்பாக உறவு முறிந்துபோனால் மற்றும் விண்ணப்பம் நாட்டிற்குள்ளாக இருந்து போடப்பட்டிருந்தால், மேலே உள்ள அத்தியாயம் 3- ல் சொல்லப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்று பொருத்தமானதாய் இருந்தால்தான் (அதாவது ஏற்பாதரவாளரது மரணம், குழந்தை உள்ள நிலை அல்லது DV/FV நிகழ்ந்திருத்தல்) விசா வழங்கப்படலாம், அப்படிப்பட்ட தருணத்தில் வழங்கப்படும் விசா நிரந்தரமானதாகும்.

2. இத் தற்காலிக வாழ்க்கைத்துணை விசாவை ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் வைத்திருந்த பிறகு உறவினை குடிவரவுத்துறை மீண்டும் மதிப்பீடு செய்யும், மற்றும் இந்த உறவு தொடர்ந்துகொண்டிருந்தால் நிரந்தர வாழ்க்கைத்துணைவர் விசாவினை (உடல்நலம், நன்னடத்தை மற்றும் இதர பொதுநலத் தேவைக்கட்டளைகள் (Public Interest Criteria) பூர்த்தி செய்யப்பட்டால்) வழங்க வேண்டும். நிரந்தர விசா வழங்கப்படுதவற்கு முன்பாக உறவு முடிவுற்றிருந்தால், மேலே அத்தியாயம் 3- ல் சொல்லப்பட்டுள்ள விதிவிலக்குகளில் ஒன்று பொருத்தமானதாயிருந்தால்தான் (அதாவது ஏற்பாதரவாளரது மரணம், குழந்தை உள்ள நிலை அல்லது DV/FV நிகழ்ந்திருத்தல்) நிரந்தர விசா வழங்கப்படலாம்.

## 3.2 DV/FV (இல்ல/குடும்ப வன்முறை) சட்ட வசதிகளைப் பயன்படுத்துதல்

விசா உபபிரிவுகளில் DV/FV (இல்ல/குடும்ப வன்முறை) சட்ட வசதிகள் செல்லுபடியாகும் விதம் மாறுபடுகிறது. DV/FV சட்ட வசதிகள் செல்லுபடியாக வேண்டுமெனில், அனைத்து விண்ணப்பங்களிலும் விண்ணப்பம் கருத்தில்கொள்ளப்படும் ஏதாவது ஒரு கட்டத்தில் உண்மையான வாழ்க்கைத்துணைவர் உறவு/சட்டப்படி அமையாத உறவு (de facto relationship)/ஒருவரைஒருவர் சார்ந்திருக்கும் உறவு (interdependent relationship) (எது பொருத்தமானதோ அது) இருந்திருக்க வேண்டியது அவசியம் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வெவ்வேறு விசா உபபிரிவுகளில் DV/FV சட்ட வசதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதன் சாராம்சம் கீழ்வரும் அட்டவணையில் தரப்படுகிறது.

| | விசா உபபிரிவு (sc) | DV/FV சட்ட வசதிகள் மதிப்பிடப்படும் சமயம் | DV/FV (இல்ல/குடும்ப வன்முறை) சட்ட வசதிகள் யாருக்குப் பொருந்தும் | யார் DV/FV (இல்ல/குடும்ப வன்முறை) க்கு ஆளாகியிருக்க முடியும் |
|---|---|---|---|---|
| 1 | 820 வாழ்க்கைத் துணைவர் | விசாவுக்கான விண்ணப்பம் செய்யப்படும் பொழுது | sc300 விசா வைத்திருக்கும் அல்லது வைத்திருந்து sc820 விசாவுக்கு விண்ணப்பிப்பவர் மற்றும் தமக்கு ஏற்பாதரவு தரும் (sponsoring) வாழ்க்கைத்துணையை மணந்துகொண்டவர். வெற்றியடைந்தால் விண்ணப்பதாரருக்கு sc801 நிரந்தர விசா ஒன்று வழங்கப்படும் | • விண்ணப்பதாரரோ; மற்றும்/அல்லது<br>• விண்ணப்பதாரருடன் இணைந்து விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரரது குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவரின் (sponsoring spouse) அல்லது விண்ணப்பதாரரின் அல்லது அவர்கள் இருவரின் சார்ந்து வாழும் குழந்தையோ;<br><br>ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவ (sponsoring spouse) ரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**புலப் பெயர்வுச் சட்டத்தின் 820.211 (8) & (9) (d) பகுதிகள்** |
| 2 | 820 வாழ்க்கைத் துணைவர் (தற்காலிக – நாட்டுக்குள் இருந்து) | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | இந்த அட்டவணையின் 1- ஆம் பிரிவிற்கு வெளியே உள்ள அனைத்து sc820/801 விசா விண்ணப்பதாரிகளும். வெற்றிபெற்றால் sc801 நிரந்தர வாழ்க்கைத்துணைவர் விசா ஒன்று வழங்கப்படும். | • விண்ணப்பதாரரோ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவரின் (sponsoring spouse) அல்லது விண்ணப்பதாரரின் அல்லது அவர்கள் இருவரின் சார்ந்து வாழும் குழந்தையோ;<br><br>ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவ (sponsoring spouse) ரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**(cl 820.221(3)(b)(i))** |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 801<br>வாழ்க்கைத் துணைவர் (நிரந்தரம் – நாட்டுக்குள் இருந்து) | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம | sc801 விசாவுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும். உபபிரிவு 820 தற்காலிக வாழ்க்கைத்துணைவர் விசா ஒன்றினை விண்ணப்பதாரர் வைத்திருக்க வேண்டும். | • விண்ணப்பதாரரோ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவரின் (sponsoring spouse) அல்லது விண்ணப்பதாரரின் அல்லது அவர்கள் இருவரின் சார்ந்து வாழும் குழந்தையோ;<br><br>ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவ (sponsoring spouse) ரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**(cl 801.221(6)(c)(i))** |
| 4 | 100<br>வாழ்க்கைத் துணைவர் (நிரந்தரம் – நாட்டுக்கு வெளியே) | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | sc100 விசாவுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும். இருப்பினும், ஒரு sc309 விசா வைத்திருப்பவர் என்ற முறையில் விண்ணப்பதாரர் ஆஸ்திரேலியாவுக்குள் முதலில் வந்த பிறகு DV/FV (இல்ல/குடும்ப) வன்முறை நிகழ்ந்திருக்க வேண்டும். பொதுவாய், DV/FV சட்டவசதிகளின்படி விண்ணப்பம் மதிப்பீடு செய்யப்படும் போது அவர்கள் அந்த விசாவைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும். | • விண்ணப்பதாரரோ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவரது குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ அல்லது விண்ணப்பதாரரின் குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ அல்லது இருவரது குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ;<br>ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத் துணைவ (sponsoring spouse) ரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**(cl 100.221(4)(c)(i))** |
| 5 | 826<br>நாட்டிற்குள் ஒருவரை ஒருவர் சார்ந்திருத்த ல்<br>தற்காலிகம் | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | sc826 விசாவுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும். வெற்றிபெற்றால் விசா விண்ணப்பதாரிக்கு நிரந்தர விசா ஒன்று வழங்கப்படும். | • விண்ணப்பதாரரோ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு அளிப்பவரை அல்லுத ிண்ணப்பதாரரைச் சார்ந்திருக்கும் பிள்ளையோ;<br>ஏற்பாதரவு தருபவரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருத்தல்<br><br>**(cl 826.221(4)(b)** |
| 6 | 814<br>நாட்டிற்குள் ஒருவரை ஒருவர் சார்ந்திருத்த ல்<br>நிரந்தரம் | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | ஏற்கனவே நாட்டிற்குள் ஒருவரைஒருவர் சார்ந்திருக்கும் தற்காலிக sc826 விசாவை வைத்துக்கொண்டு sc814 விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் | • விண்ணப்பதாரரோ ; மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு அளிப்பவரை அல்லது ிண்ணப்பதாரரைச் சார்ந்திருக்கும் ிள்ளையோ;<br>ஏற்பாதரவு தருபவரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**(cl 814.221 (8)(c))** |
| 7 | 110<br>நாட்டுக்கு வெளியே ஒருவரை ஒருவர் சார்ந்திருத்த ல்<br>நிரந்தரம் | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | Sc110 விசாவுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும். இருப்பினும், ஒரு sc310 விசா வைத்திருப்பவர் என்ற முறையில் விண்ணப்பதாரர் ஆஸ்திரேலியாவுக்குள் முதலில் வந்த பிறகு DV/FV (இல்ல/குடும்ப) வன்முறை நிகழ்ந்திருக்க வேண்டும். பொதுவாய், குடும்ப வன்முறை சட்டவசதிகளின்படி விண்ணப்பம் மதிப்பீடு செய்யப்படும் போது அவர்கள் அந்த விசாவைத் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும். | • விண்ணப்பதாரரோ மற்றும்/அல்லது<br>• ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவரது குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ அல்லது விண்ணப்பதாரரது குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரோ<br><br>ஏற்பாதரவு தருபவரால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும்.<br><br>**(cl 110.221(4)(c))** |
| 8 | 445<br>சார்ந்து வாழும் பிள்ளை | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | விசா வைத்திருக்கும் பெற்றோருக்கும், அந்தப் பெற்றோருக்கு ஏற்பாதரவு அளிப்பவருக்கும் இடையேயுள்ள தொடர்பு முறிவடைந்த பிறகு விசா வைத்திருக்கும் பெற்றோர் DV/FV சட்ட வசதிகளின் கீழ் sc100> 110> 814 அல்லது 801 விசா கருத்தில் கொள்ளப்படவேண்டும் என வேண்டியிருந்தால் sc445 விசாவுக்காக விண்ணப்பிக்கும் ஒருவர் DV/FV சட்டவசதிகளைச் சார்ந்திருக்கலாம். | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 845 / 846/ 855/ 856/ 857/ 858 | விசா குறித்து முடிவு எடுக்கப்படும் நேரம் | கீழ்வரும் தருணங்களில் விசாவுக்காக இரண்டாம் நிலையில் விண்ணப்பிப்பவர் (secondary applicant) DV/FV சட்டவசதிகளைச் சார்ந்திருக்கலாம்.<br>• இரண்டாம் நிலையில் விண்ணப்பிப்பவர் பிரதான விண்ணப்பதாரி (primary applicant) யின் வாழ்க்கைத்துணைவராயிருக்கும் போது; மற்றும்<br>• இரண்டாம்நிலை விண்ணப்பதாரர் மற்றும் பிரதான விண்ணப்பதாரருக்கிடையே உறவு முடிவடைந்திருத்தல் | • இரண்டாம்நிலை விண்ணப்பதாரரோ; மற்றும்/ அல்லது<br>• பிரதான விண்ணப்பதாரருடன் இணைந்து விண்ணப்பித்திருக்கும் இரண்டாம்நிலை விண்ணப்பதாரரது குடும்ப அமைப்பின் ஒரு அங்கத்தினரோ; மற்றும்/ அல்லது<br>• விண்ணப்பதாரர் அல்லது பிரதான விண்ணப்பதாரரைச் சார்ந்திருக்கும் பிள்ளையோ<br>பிரதான விண்ணப்பதாரியால் இழைக்கப்பட்ட குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்க வேண்டும். |

**முக்கியக் குறிப்பு!** மேலேயுள்ள அட்டவணையில் 1 – 8 வகைகளில் தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் ஏற்பாதரவு தரும் வாழ்க்கைத்துணைவராய் இருக்க வேண்டும். 9 – ஆம் வகையில் தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் பிரதான விண்ணப்பதாரியாய் இருக்க வேண்டும்.

# 4. உண்மையான உறவு

DV/FV சட்ட வசதிகள் மூலம் பயனடைய வேண்டுமென்றால், DV/FV சட்டவசதிகள் பொருந்தும் அனைத்து வாழ்க்கைத்துணை விசா விண்ணப்பங்களுக்கும் உண்மையான கணவன்-மனைவி/சட்டம் சாராத உறவு (de facto relationship)/ஒருவரைஒருவர் சார்ந்திருக்கும் உறவு (interdependency relationship) (எது பொருந்துமோ அது) விசா விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படும் ஏதாவது ஒரு கட்டத்தில் இருந்திருக்க வேண்டும். விசா விண்ணப்பம் கருத்தில்கொள்ளப்படும் போது குறிப்பிட்ட நேரத்தில் உண்மையான உறவு இருந்ததில்லை எனக் கண்டுபிடிக்கப்பட்டால் இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்று முடிவு எடுப்பவர் கருத வேண்டியதில்லை.

# 5. யார் ‘பாதிக்கப்பட்டதாய்க் கருதப்படுபவர்’ ஆகலாம்?

கீழ்வருபவர்களில் ஒருவர்தான் ‘பாதிக்கப்பட்டதாய்க் கருதப்படுபவர்’ ஆகலாம் (விதிமுறை (reg) 1.23(2)):

- தீங்கிழைத்தவராய்ச் சொல்லப்படுபவரது வாழ்க்கைத்துணை; அல்லது
- கீழ்வருபவர்களில் ஒருவரைச் சார்ந்திருக்கும் பிள்ளை:
  - ⇒ தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்; அல்லது
  - ⇒ தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவரது வாழ்க்கைத்துணை; அல்லது
  - ⇒ தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் மற்றும் அவரது வாழ்க்கைத்துணை ஆகிய இருவருமே; அல்லது
  - ⇒ தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடன் ஒருவரைஒருவர் சார்ந்திருக்கும் உறவுமுறையில் உள்ள ஒருவர்; அல்லது
- தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடைய வாழ்க்கைத்துணைவரது குடும்ப அமைப்பின் உறுப்பினர்

இதற்கும் மேலாக, யாரெல்லாம் இல்ல/குடும்ப வன்முறையால் ‘துன்புற்’றிருக்கலாம் என ஒவ்வொரு விசா உபபிரிவும் அடையாளம் காட்டுகிறது (3.2 – ல் உள்ள அட்டவணையைப் பார்க்க).

# 6. யார் ‘தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்’ ஆகலாம்?

வாழ்க்கைத்துணைவர் விசாவைப் பொருத்தவரையில் ‘ஏற்பாதரவளிக்கும் வாழ்க்கைத்துணை’யாலோ அல்லது ஏற்பாதரவளிக்கும் ஒருவரைஒருவர் சார்ந்திருக்கும் சேர்ந்துவாழ்பவராலோ இல்ல/குடும்ப வன்முறை இழைக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே ஏற்பாதரவளிக்கும் கணவன்-மனைவி/சேர்ந்துவாழ்பவரே தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவராய் இருக்கவேண்டும். இல்ல/குடும்ப வன்முறையை நிரூபிக்க சமர்ப்பிக்கப்படும் எந்த சான்றும் ஏற்பாதரவளிக்கும் கணவன்-மனைவி/சேர்ந்துவாழ்பவரை ‘தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்’ என அடையாளம் காட்டவேண்டும். உதாரணத்திற்கு, ஏற்பாதரவளிக்கும் வாழ்க்கைத்துணையின் சகோதரனை ‘தீங்கிழைத்தவர்’ எனக் காட்டும் சான்று DV/FV சட்டவசதிகளுக்கு உகந்ததாகாது.

DV/FV சட்டவசதிகள் செல்லுபடியாகும் அனைத்து விசா உபபிரிவுகளிலும் ‘தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்’ எனும் பதம் ஒரே மாதிரியான அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதனை வாசகர்கள் அறிய வேண்டும். உதாரணத்திற்கு, ‘Employer Nomination Scheme’ உபபிரிவு 856 விசாவில் இரண்டாம்நிலை விண்ணப்பதாரர் DV/FV சட்டவசதிகளை கோரும் போது தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் பிரதான விண்ணப்பதாரியாய் இருக்க வேண்டும், ஏற்பாதரவு அளிப்பவர் (sponsor) அல்ல.

## 7. விண்ணப்பதாரர் ஏற்பாதரவளிப்பவருடனோ அல்லது தீங்கிழைத்ததாய்க் குற்றம் சாட்டப்படுபவருடனோ இன்னும் வாழ்ந்துகொண்டிருந்தால

விண்ணப்பதாரர் மற்றும் அவருடன் சேர்ந்துவாழ்பவர் ஆகியோர் இடையே உறவு முடிவுறும் போதுதான் DV/FV சட்டவசதிகள் நடைமுறைக்கு வரும். விண்ணப்பதாரரும் மற்றும் அவரது துணைவரும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தால் உறவு முடிவடைந்துவிட்டது என நிருபிப்பது கடினமாகலாம் (ஆனால் முடியாததல்ல).

## 8. உறவு முடிவுறும போது விண்ணப்பதாரருக்கு எழும் கடமைகள்

புலப்பெயர்வுச் சட்டம் (*Migration Act*) s104- ன் கீழ், உறவு முடிவடைந்துவிட்டது என்பது உள்ளடங்க சூழ்நிலை மாற்றங்களை துறைக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடமை விசா விண்ணப்பதாரிகளுக்கு உண்டு. 14 நாட்களுக்கோ அல்லது அதற்கும் மேற்பட்டோ முகவரியை அவர்கள் மாற்றினாலும் துறைக்கு இதை அவசியம் (சட்டத்தின் s52 (3B)- ன் கீழ்) தெரியப்படுத்த வேண்டும்.

இல்ல/குடும்ப வன்முறைக்கு ஆளான விண்ணப்பதாரிகள் கூடிய சீக்கிரம் இதைத் துறைக்குத் தெரியப்படுத்த வேண்டும். அப்போதுதான் இல்ல/குடும்ப வன்முறைக்கான ஆதாரம் பெறப்படும் முன் விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படுவதை நிறுத்திவைக்க முடியும். உறவின் முறிவு, இல்ல/குடும்ப வன்முறையின் இருப்பு மற்றும் முகவரி மாற்றம் ஆகியவற்றை எழுத்து மூலமாக விண்ணப்பதாரி துறைக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர் துறையுடன் தொடர்புகொள்ளவில்லை என்றாலோ,இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்பது துறைக்குத் தெரியவில்லை என்றாலோ விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, இதனால் பல்வேறான சட்ட சிக்கல்கள் எழலாம். மாறாக ஏற்பாதரவளிப்பவர் (sponsor), விண்ணப்பதாரி ஆகிய இருவருமே துறைக்குத் தெரியப்படுத்தாமல் இருந்து, உறவு தொடர்கிறது என்ற அடிப்படையில் விசா வழங்கப்படுகிறது என்றால், பிறகு இது ரத்து செய்யப்படலாம்.

## 9. இல்ல/குடும்ப வன்முறையை நிரூபித்தல் - ‘நிகழ்ந்துள்ளதாய்க் கருதப்படலாம்’ என்று கூறும் சட்டவசதிகள்

புலப்பெயர்வு விதிமுறைகள் *(Migration Regulations)* reg 1.23 –ன் கீழ், கீழ்வரும் தருணங்களில் இல்ல/குடும்ப வன்முறை ‘நிகழ்ந்துள்ளதாய்க் கருதப்படலாம்’, அதாவது‘பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்’ (‘alleged victim’) இல்ல/குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்கிறார் என்று கருதப்படுவார், மற்றும் ‘தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்’ (‘alleged perpetrator’) இல்ல/குடும்ப வன்முறையை இழைத்துள்ளதாய் எடுத்துக்கொள்ளப்படுவார்:

**(a) இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்பதற்கான சட்டப்படியான ஆதாரம் (judicial evidence) இருந்தால, அதாவது**

- குடும்ப சட்டம் 1975-இன் *(Family Law Act 1975)* பத்தி 114(1)(a), (b) அல்லது (c) ஆகியவற்றின் கீழ் தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருக்கு எதிராக பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர் விண்ணப்பித்து நீதிமன்றத் தடைஉத்திரவு ஒன்றைப் பெற்றிருந்தால்; அல்லது
- பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவருக்கு வன்முறையிலிருந்து பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருக்கு எதிராக மாநில அல்லது எல்லைப்பகுதி சட்டத்தின் கீழ் ஒரு நீதிமன்றம் உத் ரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தால், மற்றும் தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருக்கு அவரது வாதத்தினைச் சொல்ல அல்லது இந்த விஷயம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் தம் வாதத்தை முன்வைக்க நீதிமன்றம் அவருக்கு வாய்ப்பளித்த பிறகு இந்த உதரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால்; அல்லது

- பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவருக்கு எதிராக தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் புரிந்துள்ள வன்முறைக்காக நீதிமன்றம் அவருக்குத் தண்டனை வழங்கியிருந்தால், அல்லது வன்முறைக் குற்றம் புரிந்துள்ளார் என்று கண்டறிந்து அதை நீதிமன்றம் பதிவு செய்திருந்தால்;

**அல்லது**

**(b) 'ஏற்றுக்கொள்ளத்தக்க இல்ல வன்முறை' ('relevant DV') அல்லது 'ஏற்றுக்கொள்ளத்தக்க குடும்ப வன்முறை' ('relevant FV') (பார்க்க: 9.3) நிகழ்ந்துள்ளதை சட்டம் சாராத ஆதாரம் நிருபிக்கிறது (பார்க்க: 9.2) என்று முடிவு எடுப்பவர் திருப்திப்பட்டால்**

**அல்லது**

**(c) பாதிப்புக்குள்ளானவர் 'ஏற்றுக்கொள்ளத்தக்க இல்ல வன்முறை' ('relevant DV') அல்லது 'ஏற்றுக்கொள்ளத்தக்க குடும்ப வன்முறை' ('relevant FV') (பார்க்க: கீழே 12) யினால் துன்புற்றிருக்கிறார் என்று கூறும் நியமிக்கப்பட்ட நடுநிலை வல்லுநரது (தற்போது செண்ட்டர்லிங்க்) கருத்தினை முடிவு எடுப்பவர் சரியென்று எடுத்துக்கொண்டால்.**

## 9.1 சட்டபூர்வ (நீதிமன்ற முறைப்படியான) ஆதாரம்

சட்டபூர்வமான ஆதாரத்தைப் பெறுவதில் அடங்கியுள்ள பல்வேறுபட்ட சட்டங்களையும், நடைமுறைகளையும் வைத்துப் பார்க்கும்பொழுது, இப்பிரசுரத்தில் அப்படிப்பட்ட நடைமுறைகளின் துல்லியமான சாராம்சத்தினைத் தருவது இயலாத காரியமாகும். மாறாக, அத்தியாயம் 13-ல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தகுதிபெற்ற அமைப்புக்களிடமிருந்து, உதாரணத்திற்கு 'பொது சமுதாய சட்ட மையம்' அல்லது 'சட்ட உதவி ஆணையம்' ('generalist community legal centre' or 'Legal Aid Commission') இது குறித்த மேலதிகத் தகவல்களையும், உதவியையும் நாடுமாறு வாசகர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

## 9.2 சட்டபூர்வமற்ற ஆதாரம்

கீழே தரப்பட்டுள்ள A, B அல்லது C – யின் வடிவில் சட்டபூர்வமற்ற ஆதாரம் குடிவரவுத் துறை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படலாம்.

(A) வன்முறைக்கான குற்றச்சாட்டு ஒன்று எழுந்தபோது நீதிமன்ற நடவடிக்கைகளின் போது 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்' மற்றும் 'தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்' ஆகியோரால் பதிவுசெய்யப்பட்ட **'இணை பொறுப்பேற்பு' (joint undertaking)**. துறையின் கொள்கை விதி கூறுவதாவது:

*வாதத்திற்குரிய ஆதாரத்தின் மீது நீதிமன்ற நடுவரோ அல்லது நீதிபதி ஒருவரோ செய்துள்ள 'கண்டுபடிப்'பினை (finding) இணை பொறுப்பேற்புக்கள் உள்ளடக்குவதில்லை. குறிப்பிட்ட சில வழிகளில் தாம் நடந்துகொள்வதாக தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களே இவை. மதிப்பீட்டிற்காக நடுநிலை வல்லுநர் ஒருவருக்கு மேற்கண்ட சூழல்களில் இணை பொறுப்பேற்புக்கள் தரும் ஒரு நபரை பரிந்துரைக்கும் விருப்புரிமை (discretion) அதிகாரிகளுக்குண்டு....இணை பொறுப்பேற்புக்களைப் பொருத்தவரையிலும் பெரும்பான்மைத் தருணங்களில் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்ட இணை பொறுப்பேற்பு ஒன்று சமர்ப்பிக்கப்படும் பொழுது அதில் விவரிக்கப்படும் நிகழ்வுகளை சந்தேகிப்பதற்கு காரணமில்லை என்று எதிர்நோக்கப்படுகிறது. தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர் தாம் பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர் மீது வன்முறைத்தனமாய் நடந்துகொண்டதாக ஒத்துக்கொள்ளும் சட்டப்படியான ஒரு ஆவணத்தை முடிவெடுப்பவர் சந்தேகிப்பதற்கு தெளிவான காரணங்கள் இருக்கவேண்டும். இருப்பினும், பொறுப்பேற்பினை ஏற்படுத்துமாறு ஏற்பாதரவளிப்பவர் (sponsor) பலவந்தப்படுத்தப்படுதல் அல்லது பொய்யான கோரல் ஒன்றிற்கு அவர் உடந்தையாயிருத்தல் போன்றவை அடங்கிய உண்மைக்குப் புறம்பான குடும்ப வன்முறை வழக்குகளில் இது சாதியமாகலாம்.)*

**அல்லது**

(B) 'ஏற்றுக்கொள்ளத்தக்க இல்ல வன்முறை' ('relevant DV') அல்லது 'ஏற்றுக்கொள்ளத்தக்க குடும்ப வன்முறை' ('relevant FV') இடம்பெற்றுள்ளது என சான்றளித்து விசா விண்ணப்பதாரியிடமிருந்து 1 சட்டப்படியான வாக்குமூலம் மற்றும் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து 2 சட்டப்படியான வாக்குமூலங்கள்.

**அல்லது**

(C) விசா விண்ணப்பதாரியிடமிருந்து 1 சட்டப்படியான வாக்குமூலம் மற்றும் '' தகுதிவாய்ந்த நபரிடமிருந்து 1 சட்டப்படியான வாக்குமூலம் மற்றும் 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்' ('alleged victim') மீது 'தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவர்' ('alleged perpetrator') செய்ததாய் சொல்லப்படும் தாக்குதல் பற்றிய காவல்துறையினர் பதிவு.

**எந்தப் படிவத்தைப் பயன்படுத்துவது-** ‘ஆஸ்திரேலியப் பொதுநல அர’ (Australian Commonwealth) சின் சட்டப்படியான வாக்குமூலம் எனும் படித்தினைத் தவிர சட்டப்படிப் பரிந்துரைக்கப்பட்ட வேறு படிவம் ஏதும் இல்லாத வேளையில் ‘குடிவரவுத் துறையின் *படிவம் 1040* (Form 1040) –ஐப் பயன்படுத்தி DV/FV வழக்குகள் குறித்த சட்டப்படியான வாக்குமூலங்கள் ஏற்படுத்தப்படலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது. சட்டப்படியான வாக்குமூலத்தை அளிப்பவரால் தேவைப்படும் அனைத்து சம்பிரதாயங்களும் பூர்த்திசெய்யப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு இந்த படிவத்தில் பயனுள்ள தகவல்கள் தரப்பட்டுள்ளன.

## 9.3 ‘ஏற்றுக்கொள்ளத்தக்க இல்ல வன்முறை’ அல்லது ‘ஏற்றுக்கொள்ளத்தக்க குடும்ப வன்முறை’

புலப்பெயர்வு விதிமுறைகள; *(Migration Regulations)* reg 1.23(2)(b)-யில் ‘ஏற்றுக்கொள்ளத்தக்க இல்ல வன்முறை’ அல்லது ‘ஏற்றுக்கொள்ளத்தக்க குடும்ப வன்முறை’ என்பதன் அர்த்தம் என்ன என்று சொல்லப்பட்டுள்ளது மற்றும் **நீதிமன்றம் சாராத ஆதாரம் (non-judicial evidence) காட்டப்படும்போது மட்டும்தான் இது ‘பொருத்தமானது’ (relevant) ஆகும்** (மேலே 9.2-ஐப் பார்க்க).

(குறிப்பு: நீதிமன்ற முறைப்படி தீர்மானிக்கப்படும் கோரல்கள் (claims) குடும்ப சட்டம் 1975 (*Family Law Act 1975*), நி.ச.வே. *குற்றங்கள் (இல்லம் மற்றும் தனிநபர் மீதான வன்முறை) சட்டம்* (NSW *Crimes (Domestic and Personal Violence) Act)* ஆகியன போன்ற வெவ்வேறு சட்ட இயற்றல்களின் கீழ் செய்யப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்களைச் சார்ந்திருக்கும்.

அக்டோபர் 15, 2007 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்கள் அனைத்திற்கும் பொருந்தக்கூடிய விளக்கம் ‘ஒத்துக்கொள்ளக் கூடிய குடும்ப வன்முறை’ (‘relevant FV’) என்பதாகும். அக்டோபர் 15, 2007- க்கும் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட விசா விண்ணப்பங்கள் அனைத்தும் ‘ஒத்துக்கொள்ளக் கூடிய இல்ல வன்முறை’ (‘relevant DV’) எனும் விளக்கத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

| **ஒத்துக்கொள்ளக்கூடிய குடும்ப வன்முறை** (reg 1.23(2) (b)) | **ஒத்துக்கொள்ளக்கூடிய இல்ல வன்முறை** (reg 1.23(2) (b)) |
|---|---|
| ஒத்துக்கொள்ளக்கூடிய குடும்ப வன்முறை என்பது கீழ்வருவோர் மீது உண்மையாகவோ அல்லது மிரட்டல் மூலமாகவோ செய்யப்பட்ட செயல்களைக் குறிக்கும்:<br>(i) பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவர்; அல்லது<br>(ii) பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவருடைய குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினர்; அல்லது<br>(iii) தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடைய குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினர்; அல்லது<br>(iv) பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவருடைய சொத்து; அல்லது<br>(v) பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவருடைய குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரது சொத்து; அல்லது<br>(vi) தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடைய குடும்பப் பிரிவின் ஒரு உறுப்பினரது சொத்து;<br><br>இந்த வன்முறைச் செயலானது பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும் நபருக்கு அவரது பொதுநலம் மற்றும் பாதுகாப்பு குறித்து நியாயமான* அச்சத்தையோ அல்லது ஏதாவது ஆகுமோ என்ற பயத்தையோ ஏற்படுத்துகிறது. | ஒத்துக்கொள்ளக்கூடிய இல்ல வன்முறை என்பது பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படும் நபர் மீதோ அல்லது அவரது சொத்தின் மீதோ செய்யப்படும் வன்முறையைக் குறிக்கும். இந்த வன்முறையானது பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவருக்கோ அல்லது பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவருடைய குடும்ப உறுப்பினருக்கோ பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவருடைய பொதுநலத்திற்கும், அல்லது பாதுகாப்பிற்கும் அச்சத்தையும் அல்லது ஏதும் நேர்ந்துவிடுமொ னன்ற பயத்தையும் தோற்றுவிக்கிறது. |

*சராசரி நபர் ஒருவர் அதே சூழ்நிலையில் தமது பொதுநலம் மற்றும் பாதுகாப்பு குறித்து அச்சமோ அல்லது ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற பயமோ கொள்வாரானால்.

புது விளக்கத்திற்கும் (ஒத்துக்கொள்ளக்கூடிய குடும்ப வன்முறை- (relevant FV)) பழையவிளக்கத்திற்கும (அதாவது ஒத்துக்கொள்ளக்கூடிய இல்ல வன்முறை –(relevant DV)) இடையே உள்ள வித்தியாசங்களில பின்வருவன அடங்கும்:

- குற்றம் புரிவதாய்ச் சொல்லப்படுபவரது செயல்கள் யார் மீது இருக்கலாம்
- குற்றம் புரிவதாய்ச் சொல்லப்படுபவரது செயலால் யாருக்கு அச்சமோ அல்லது ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற பயமோ உண்டாகலாம்
- யாருடைய பொதுநலத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சமோ அல்லது ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற பயமோ உண்டாகலாம்
- ஒருவரது பொதுநலம், பாதுகாப்பு குறித்த அச்சம் அல்லது ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற பயம் நியாயமானதாய் இருக்கவேண்டும் என்பது புதிய தேவை (requirement) யாகும்; மற்றும்
- “குடும்ப வன்முறை” (“family violence”) எனும் விளக்கத்தில் “வன்முறை” (“violence”) எனும் பதம் உண்மையில் பயன்படுத்தப்படுவதில்லை.

முக்கியமாக:

- 'வன்முறை' எனும் பதத்தில் வன்முறை பயன்படுத்தப்படும் என்ற அச்சுறுத்தலும் அடங்கும் என்பதை reg 1.21(1) தெளிவு படுத்துகிறது;
- அப்படிப்பட்ட நடத்தை 'பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவ'ரைக் குறி வைத்துத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை; ஆனால் இந்த நடத்தை பாதிப்புக்குள்ளானதாய்ச் சொல்லப்படுபவருக்கு அவரது சொந்தப் பாதுகாப்பு மற்றும் பொதுநலம் குறித்து நியாயமான அச்சத்தையோ அல்லது ஏதும் நேர்ந்துவிடுமோ என்ற பயத்தையோ தோற்றுவிக்கவேண்டியது அவசியம்;
- உடல் பலத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் தாக்குதலாகத்தான் 'வன்முறை' இருக்கவேண்டும் என்பதில்லை, மற்றும் இது மனம் மற்றும் உணர்வு ஆகியவற்றின் மீது இழைக்கப்படும் துஷ்பிரயோகமாகவும் இருக்கலாம்: *Sok v MIMIA [2005] FCAFC 56.*

## 9.4 'தகுதிவாய்ந்த நபர்' யார்?

கீழ்வரும் வாழ்க்கைத்தொழில்கள்/பிரிவுகளைச் சார்ந்த ஒருவரோ அல்லது அதற்கும் மேற்பட்டவரோதான் 'தகுதிவாய்ந்த' நபராக இருக்க முடியும்:

- மருத்துவர்
- பதிவு பெற்றுள்ள உளவியல் நிபுணர்
- பதிவு பெற்றுள்ள தாதி (nurse)
- சமூக சேவகர் (social worker) ('ஆஸ்திரேலிய சமூக சேவகர் சங்க' (Australian Association of Social Workers) த்தின் உறுப்பினராயிருப்பவர் அல்லது உறுப்பினராகும் தகுதிபெற்றவர் என அங்கீகரிக்கப்படுபவர்;
- 'குடும்ப ஆலோசகர்' குடும்ப சட்டம் 1975 –ன் கீழ்
- குழந்தைப் பாதுகாப்பு சேவகர் (child protection worker) (குழந்தைகள் மீது இழைக்கப்படும்
- வன்முறையிலிருந்து); அல்லது மகளிர் புகலிடம் (women's refuge) ஒன்றின் நிர்வாகி அல்லது ஒருங்கிணைப்பாளர் அல்லது இல்ல வன்முறை/குடும்ப வன்முறைக்கான நெருக்கடி சேவை அல்லது அறிவுரை-ஆலோசனைச் சேவை. தகுதிவாய்ந்த நபர் கீழ்வரும் சேவைகளை வழங்கும் சேவகர் ஒருவராகவும் இருக்கலாம்:
  - ⇒ சேவகர் புகலிடம்/நெருக்கடிநேர அல்லது ஆலோசனைச் சேவையில் முடிவுகள் எடுக்கும் பொறுப்பில் உள்ளவர்; மற்றும்
  - ⇒ அந்த சேவை 'ஒட்டுமொத்த முடிவெடுப்பு அமைப்புமுறை' ('collective decision making structure') யைக் கொண்டது ; மற்றும்
  - ⇒ அந்த சேவைக்குள்ளாக இல்ல வன்முறை/குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குப் பொறுப்பேற்கும் பதவியில் சேவகர் இருக்கவேண்டும்.

**முக்கியக் குறிப்பு!** சமீபத்தில் ஆஸ்திரேலியக் கூட்டரசு நீதிமன்ற (Federal Court of Australia) த்தில் *MIAC v Pham [2008] FCA 320* எனும் வழக்கில் இந்தப் பிரிவு கருத்தில்கொள்ளப்பட்டது, மற்றும் அச்சமயம் நீதிமன்றம் தெரிவித்த கருத்து:

> ...மகளிர் புகலிடம் அல்லது பரிந்துரைக்கப்பட்ட ஒரு நெருக்கடிநேர மற்றும் அறிவுரை ஆலோசனைச் சேவையின் நிர்வாகி அல்லது ஒருங்கிணைப்பாளர்' எனும் வார்த்தைகள் 'தகுதிவாய்ந்த நபர்' என்பவர் மகளிர் புகலிடம் அல்லது நெருக்கடிநேர மற்றும் அறிவுரை ஆலோசனைச் சேவையின் பொதுவான இயக்கமுறைகளைக் கவனிக்கும் நிர்வாகப் பதவி வகிப்பவராக இருக்கவேண்டும் என்ற தேவையை ஏற்படுத்துகின்றன.

## 9.5 சட்டப்படியான வாக்குமூலங்கள் எதை உள்ளடக்க வேண்டும்?

### 9.5.1 விசா விண்ணப்பதாரரால் ஏற்படுத்தப்படும் சட்டப்படியான வாக்குமூலம்

தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடைய வாழ்க்கைத்துணை (spouse) யாகவோ அல்லது ஒருவரைஒருவர் சார்ந்து கூடவாழ்பவ (interdependent partner) ராகவோஇருக்கும் விசா விண்ணப்பதாரரால் இந்த வாக்குமூலம் செய்யப்பட வேண்டும் ('பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவ'ராக அவர் இருப்பினும் அல்லது இல்லாவிடினும்). விசா விண்ணப்பதாரரால் ஏற்படுத்தப்படும் சட்டப்படியான வாக்குமூலங்களுக்கான தேவைகள் இல்ல/குடும்ப வன்முறையால் 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவ'ராய்அடையாளம் காட்டப்படுபவர் யார் என்பதைப் பொறுத்து மாறுபடும்.

- **வாழ்க்கைத்துணை (spouse) யோ அல்லது ஒருவரைஒருவர் சார்ந்து கூடவாழ்பவ (interdependent partner) ரோ இல்ல/குடும்ப வன்முறையால் 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவ'ராய் இருந்தால்,** சட்டப்படியான வாக்குமூலமானது:
  - ⇒ ஒத்துக்கொள்ளத்தக்க DV/FV குற்றச்சாட்டைக் கோடிட்டுக் காட்டவேண்டும் ('பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்' மீது இது ஏற்படுத்திய தாக்கம் உட்பட); மற்றும்
  - ⇒ ஒத்துக்கொள்ளத்தக்க DV/FV –யை இழைத்ததாய்ச் சொல்லப்படுபவருடைய பெயரைக் குறிப்பிட வேண்டும்; மற்றும்
  - ⇒ 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்' (இத் தருணத்தில், சட்டப்படிான வாக்குமூலத்தை ஏற்படுத்துபவர்) மீது வன்முறை நிகழ்த்தப்படாமலிருந்தால், யார் மீது அச் செயல் திசை திருப்பப்பட்டது என்பதையும் குறிப்பிட வேண்டும், மற்றும் சட்டப்படியான வாக்குமூலத்தை அளிப்பவருக்கும் யார் மீது இச் செயல் புரியப்பட்டதோ அவருக்கும் இடையே என்ன உறவுமுறை என்பதையும் அடையாளம் காட்டவேண்டும்.

- **வாழ்க்கைத்துணை (spouse) யோ அல்லது ஒருவரைஒருவர் சார்ந்து கூடவாழ்பவ (interdependent partner) ரோ இல்ல/குடும்ப வன்முறையால் 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவ'ராய் இல்லை என்றால்,** வாழ்க்கைத்துணை (spouse) யோ அல்லது ஒருவரைஒருவர் சார்ந்து கூடவாழ்பவ (interdependent partner) ரோ சட்டப்படியயான வாக்குமூலத்தை அவசியம் பூர்த்திசெய்யவேண்டும், மற்றும் வாக்குமூலமானது:
  - ⇒ யார் மீது அச் செயல் திசை திருப்பப்பட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும் (உதாரணமாக
    - o விசாவில் இருக்கும் வாழ்க்கைத்துணைவர் மரியா என்று வைத்துக்கொண்டால் மற்றும்
    - o பாப் (Bob) என்ற 10 வயது சிறுவன் வேறு ஒரு பழைய உறவின் மூலம் பிறந்த அவளது குழந்தை என்றால்; மற்றும்
    - o மரியாவிற்கு ஏற்பாதரவு அளிக்கும் வாழ்க்கைத்துணைவரது செயல் பாப் மீது திசை ிருப்பப்பட்டிருந்தது என்றால், பாப் -இன் பெயர் குறிப்பிடப்படவேண்டும்;
  - ⇒ 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவ'ருக்கும் மற்றும் யார் மீது இச் செயல் புரியப்பட்டதோ அவருக்கும் என்ன தொடர்பு என்பதை அடையாளம் காட்டவேண்டும் (உதாரணமாக, மேலே சொல்லப்பட்ட சூழ்நிலையில் மரியாவின் சட்டப்படியான வாக்குமூலம் பின்வருவது போல் இருக்கவேண்டும்: 'பாப் என்பது எனது முந்தைய ஒரு உறவின் மூலம் பிறந்த எனது சொந்த மகன், (biological son) மற்றும் இவன்தான் பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவன்'.
  - ⇒ சட்டப்படியான வாக்குமூலத்தை ஏற்படுத்துபவருக்கும், (அதாவது வாழ்க்கைத்துணைவர் (spouse) அல்லது ஒருவரைஒருவர் சார்ந்து கூடவாழ்பவர் (interdependent partner)) மற்றும் யார் மீது செயல் திசை ிருப்பப்பட்டிருந்ததோ அவருக்கும் இடையே உள்ள உறவுமுறையை அடையாளம் காட்டவேண்டும். (உதாரணமாக, மேலே சொல்லப்பட்ட சூழ்நிலையில் மரியாவின் சட்டப்படியான வாக்குமூலம் பின்வருவது போல் இருக்கவேண்டும்: 'பாப் என்பது எனது முந்தைய ஒரு உறவின் மூலம் பிறந்த எனது சொந்த மகன் (biological son)'; மற்றும்
  - ⇒ ஒத்துக்கொள்ளக் கூடிய இல்ல/குடும்ப வன்முறைக்கு அடிப்படையாய் அமைந்த ஆதாரத்தையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

## 9.5.2 'தகுதிவாய்ந்த நபர்' ('competent person') ஒருவரால் அளிக்கப்படும் சட்டப்படியான வாக்குமூலம்

ஒரு விண்ணப்பதாரர் 'தகுதி வாய்ந்த நபர்'களிடமிருந்து இரண்டு சட்டப்படியான வாக்குமூலங்களை அளிக்கிறார் என்றால், ஒவ்வொரு சட்டப்படியான வாக்குமூலமும் வெவ்வேறு வகைப்பட்ட தகுதிவாய்ந்த நபரிடமிருந்து பெறப்பட வேண்டும். உதாரணத்திற்கு, இரண்டு புகலிடச் சேவகர்களிடமிருந்து பெறப்பட்ட இரு சட்டப்படியான வாக்குமூலங்கள் ஏற்கப்படத்தக்கவை அல்ல, ஆனால் ஒரு புகலிடச் சேவகர் மற்றும் ஒரு தாதி ஆகியோரிடமிருந்து இவை பெறப்படலாம்.

'தகுதிவாய்ந்த நப'ரிடமிருந்து பெறப்பட்ட சட்டப்படியான வவாக்குமூலம் பின்வருவனவற்றை உள்ளடக்க வேண்டும்:

- 'பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்' ஒத்துக்கொள்ளத்தக்க இல்ல/குடும்ப வன்முறைக்கு ஆளாகியிருக்கிறார் என்று 'தகுதிவாய்ந்த நப'ரால் அளிக்கப்படும் கருத்து; மற்றும்
- அந்தக் கருத்துக்கான அடிப்படை (எடுத்துக்காட்டாக, பாதிப்புக்குள்ளானவரால் விவரிக்கப்பட்ட இல்ல/குடும்ப வன்முறைச் செயல்களுக்கான உதாரணங்களையும், பாதிக்கப்பட்டவரது மனநிலை, உடல் மற்றும் உணர்வு நிலை ஆகியவற்றையும் மற்றும் இவை இல்ல/குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டதால் ஏற்படும் விளைவுகளைப் போல இருக்கிறதா என்பதையும், தகுதிவாய்ந்த நபருக்கு மற்ற இல்ல/குடும்ப வன்முறைக்காளானவர்களுடன் ஏற்பட்ட அனுபவங்களையும் தகுதிவாய்ந்த நபர் அளிக்கலாம்); மற்றும்
- பாதிக்கப்பட்டவரது பெயர்; மற்றும்
- தீங்கிழைத்தவரின் பெயர்; மற்றும்

- தீங்கிழைத்ததாய்ச் சொல்லப்படுபவரது செயல் குறிப்பாக ‘பாதிப்புக்குள்ளானவர்’ மீது திசைப்படுத்தப்படவில்லையா என்பது (உதாரணமாக, அது குடும்பப் பிரிவின் யென்னொரு உறுப்பினர் மீது திசைப்படுத்தப்பட்டது):
  - ⇒ தீங்கிழைத்தவரது செயல் திசைப்படுத்தப்பட்ட நபரின் பெயர்; மற்றும்
  - ⇒ ‘பாதிக்கப்பட்டதாய்ச் சொல்லப்படுபவர்’ மற்றும் செயல் திசைதிருப்பப்பட்ட நபர் ஆகியோருக்கு இடையே ள்ள தொடர்பினையும் குறிப்பிட வேண்டும்.

சட்டப்படியான வாக்குமூலம் ஒன்றினை அளிக்க தாம் எவ்வகையில் தகுதிபெற்றுள்ளனர் என்பதையும் இந்தத் ‘தகுதிவாய்ந்த நபர்’ தெரிவிக்கவேண்டும். தமது தகுதியைக் காட்டும் ஆதாரமாக தமது தகுதிச் சான்றிதழின் பிரதி ஒன்றை இவர் இணைப்பது நலமாகும்.

## 9.6 சட்டப்படியான வாக்குமூலம் படிவம் *(படிவம் 1040)*

விண்ணப்பதாரரும், சட்டப்படியான வாக்குமூலங்களை அளிப்போரும் பயன்படுத்தவல்ல படிவம்1040 (*Form 1040*) என்பது <www.immi.gov.au> எனும் இணையதளத்தில் கிட்டும் திணைக்களப் படிவமாகும். சட்டங்களில் இப் படிவம் பரிந்துரைக்கப்படவில்லை, மற்றும் இப் படிவத்தினைப் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும் என்பதில்லை. இருப்பினும், வாக்குமூலம் அளிப்பவருக்கு கருத்தில் கொள்ளப்படவேண்டிய தகுந்த விஷயங்களை இப்படிவம் அறிமுகப்படுத்துவதால் இது உதவிகரமானதாகும்.

## 9.7 தாக்குதல் குறித்த காவல்துறைப் பதிவுகள்

காவல்துறையினருக்குத் தாக்குதல் தெரிவிக்கப்பட்டிருந்தால் சட்ட வாக்குமூலங்களில் ஒன்றுக்குப் பதிலாக காவல்துறைப் பதிவு இடம் பெறலாம். இல்ல/குடும்ப வன்முறை சட்டவசதிகள் விடயங்களில் பாதிக்கப்பட்டவர் காவல்துறைக்கு அளித்த வாக்குமூலத்தினை காவல்துறைப் பதிவுக்குப் பதிலாகப் பயன்படுத்த இயலாது.

# 10. இல்ல/குடும்ப வன்முறை நிருபிக்கப்பட்டால்

இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்பதில் துறைக்குத் திருப்தி ஏற்பட்டால், மற்றும் உடல்நலம், நன்னடத்தை மற்றும் இதர பொதுநலம் சம்பந்தப்பட்ட தேவைக்கட்டளைகள் (criteria) ஆகியவற்றை விண்ணப்பதாரர் பூர்த்தி செய்தால், விண்ணப்பதாரருக்கு நிரந்தர விசா ஒன்று வழங்கப்படும்.

# 11. இல்ல/குடும்ப வன்முறை நிருபிக்கப்படாவிட்டால்

இல்ல/குடும்ப வன்முறை குறித்து ‘நீதிமன்ற முறைப்படி உறுதிப்படுத்தப்பட்ட’ (‘judicially determined’) சான்றினை இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது என்பதற்கான திருப்திகரமான சான்றாக மந்திரி ஏற்றுக்கொள்ள வேண்டிய அதே நேரத்தில் ‘நீதிமன்றம் சாராத முறைகள் மூலமாக முடிவு செய்யப்பட்ட’ (‘non-judicially determined’) (உதாரணம்: சட்ட வாக்குமூலங்கள், இணை பொறுப்பேற்புக்கள் அல்லது காவல்துறைப் பதிவுகளை இல்ல/குடும்ப வன்முறை நிகழ்ந்துள்ளது எனக் காட்டும் முடிவுகட்டும் ஆதாரமாக ஏற்க வேண்டியதில்லை.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள சான்று ஒத்துக் கொள்ளத்தக்க இல்ல/குடும்ப வன்முறை (relevant DV/FV) நிகழ்ந்துள்ளது என்று போதுமான அளவுக்குக் காட்டுகிறது என்பதில் மந்திரி திருப்திப்படவில்லை என்றால், தனிப்பட்ட நடுநிலை மதிப்பீ (independent assessment) ட்டுக்கென விடயம் பரிந்துரைக்கப்படவேண்டும் - தற்சமயம் இது சென்ட்டர்லிங்க்-கின் பொறுப்பில் உள்ளது.

### சந்தேகத்திற்குரிய வழக்குகள்

ஒத்துக் கொள்ளத்தக்க இல்ல/குடும்ப வன்முறை (relevant DV/FV) நிகழ்ந்துள்ளதா இல்லையா என்றும், குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமானவையா இல்லையா என்றும் மதிப்பீடு செய்வதில் திணைக்களம் கீழ்வருவனவற்றைக் கருத்தில் கொள்ளும்:

- சட்ட வாக்குமூலங்களில் உள்ள தகவல்கள் தெளிவற்றோ அல்லது உறுதியற்றோ இருக்கின்றனவா என்று;
- கீழ்க்காண்பன போன்ற முரண்பாடான ஆதாரம் ஏதும் உள்ளனவா என்று;
  - ⇒ தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது தோற்றுப்போன நீதிமன்ற வழக்குகள;
  - ⇒ சட்ட வாக்குமூலங்களுக்குள்ளாக அல்லது அவற்றின் இடையே முரண்பாடான கூற்றுகள் ஏதும் உள்ளனவா என்று;
  - ⇒ மூன்றாம் தரப்பு நபர்களால் முரண்பாடான தகவல்கள் ஏதும் முன்னால் தரப்பட்டிருக்கின்றனவா என்று;

- வழக்கில் சம்பந்தப்பட்டவர்களது உறவுமுறை எவ்வளவு காலமாக இருந்திருக்கிறது என்று;
- விண்ணப்பதாரரது இல்ல/குடும்ப வன்முறை குறித்த வேண்டுகோளை அவர் இதற்குக் காரணமாக இருந்த இருந்த வன்முறை நடந்து எவ்வளவு நாட்களுக்குப் பின் சமர்ப்பிக்கிறார் என்பது;
- வாக்குமூலங்களில் உள்ள தகவல்கள் போதுமான அளவுக்கு விளக்கமாக உள்ளனவா அல்லது இன்னும் விவரம் தேவையா என்று;
- இல்ல/குடும்ப வன்முறை குறித்து விண்ணப்பிப்பவருக்கு எதிராக ஏற்பாதரவளிப்பவர் நீதிமன்ற உத்திரவுகள் பெற்றிருக்கிறாரா என்று.

வேண்டுகோள் உண்மையானதுதான் என்பதற்கான ‘வலுவான ஆதாரம்’ இருந்தாலொழிய, ஆண்மகன் (male) ஒருவரால் விடுக்கப்படும் ‘ஏற்கத்தக்க இல்ல/குடும்ப வன்முறை’ குறித்த நீதிமன்றமுறைகளுக்கு அப்பாற்பட்டு முடிவுகட்டப்பட்ட வேண்டுகோளினை தனிப்பட்ட நடுநிலையான மதிப்பீட்டிற்குப் பரிந்துரைப்பதை திணைக்களம் நியாயமானதாகக் கருதுகிறது என்பதை திணைக்களத்தின் கொள்கை சுட்டிக்காட்டுகிறது.

முடிவெடுப்பருக்கு இருக்கக்கூடிய எந்த ஐயங்களுக்கும் பதிலளிக்கும் வகையில் மருத்துவ அல்லது உளவியல் சம்பந்தமான அறிக்கைகள் உட்பட வேண்டுகோளுக்கு வலுவூட்டும் கூடுதல் சானன்றுகளை அளிப்பது பயனளிக்கலாம்.

# 12. ‘ஏற்கத்தக்க இல்ல/குடும்ப வன்முறை’ குறித்த தனிப்பட்ட நடுநிலை மதிப்பீடு

‘ஏற்கத்தக்க இல்ல/குடும்ப வன்முறை’ நிகழ்ந்திருக்கிறது என்று மந்திரிக்குத் திருப்தி ஏற்படவில்லை என்றால், ‘புலப்பெயர்வுச் சட்டங்க’ (Migration Regulations) ளின் reg 1.23(1B) b)-யின் கீழ் உரிய தகுதிபெற்ற ‘தனிப்பட்ட சிறப்பு நடுவர்’ (‘independent expert’) ஒருவருக்கு (தற்சமயம் ‘சென்ட்டர்லிங்க்’) பிரச்சினை பரிந்துரைக்கப்பட வேண்டும்.

‘சென்ட்டர்லிங்க்’கிற்கு வழக்கு ஒன்று பரிந்துரைக்கப்படும் போது விண்ணப்பதாரிக்கு இது தெரியப்படுத்தப்படும். மதிப்பீடு செய்வதில் ‘சென்ட்டர்லிங்க்’கிற்கு உதவ வேண்டி திணைக்களத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் ‘சென்ட்டர்லிங்க்’கிற்கு அனுப்பப்படும். ‘சென்ட்டர்லிங்க்’கிற்கு மேலதிகத் தகவல் எதுவும் தேவைப்பட்டால், இது குறித்து விண்ணப்பதாரர் மற்றும் ‘சென்ட்டர்லிங்க்’ ஆகிய இருவருக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்பாடு செய்யப்படும்.

‘சென்ட்டர்லிங்க்’கினால் செய்யப்படும் மதிப்பீடு ‘ஏற்கத்தக்க இல்ல/குடும்ப வன்முறை’ நிகழ்ந்திருக்கிறதா இல்லையா என்ற விடயத்தினைப் பொறுத்து மட்டிலுமே அமையும். ‘சென்ட்டர்லிங்க்’கின் கண்டுபிடிப்பு (finding) இறுதியானதும் கட்டுப்படுத்துவதுமாகும். எனவே, ‘ஏற்கத்தக்க இல்ல/குடும்ப வன்முறை’ நிகழ்ந்திருக்கவில்லை என ‘சென்ட்டர்லிங்க்’ தீர்மானித்தால், இம்முடிவினை வழக்கிற்குப் பொறுப்பாய் இருக்கும் அதிகாரி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

# 13. எங்கே உதவி நாடலாம்?

**முக்கியம்**

**நிரந்தரக் குடிகளாக இல்லாத இல்ல/குடும்ப வன்முறைக்குப் பலியானோர் மாறியுள்ள தமது சூழ்நிலைகளை (உறவு முறிவு, முகவரி மாற்றம், இல்ல/குடும்ப வன்முறை, குழந்தை ஆகியவற்றின் இருப்பு உள்ளடங்க) எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் தெரியப்படுத்த வேண்டி திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும். குடிவரவுத் துறையின் அறிவுரை மற்றும் பொதுவான சட்ட ஆலோசனை ஆகியவற்றை நாடுவது அடுத்த கட்டமாகும். அனைத்து வேளைகளிலும் பாதுகாப்பு மிக முக்கியமானதாகும். குடிவரவு சம்பந்தப்பட்ட இல்ல/குடும்ப வன்முறை சூழ்நிலைகளில் உதவக் கூடிய மிக முக்கிய சேவைகளை பின்வரும் தொடர்பு விவரங்கள் அடையாளம் காட்டுகின்றன. கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சேவைகளில் பெரும்பாலானவை (ஆனால் அனைத்தும் அல்ல) நி.ச.வே மாநிலத்தில் மட்டுமே செயலாற்றும். நி.ச. வே மாநிலத்திற்கு வெளியே**

**தேவைப்படும் சட்ட சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு (02) 9264 9595 எனும் எண் மூலம் 'தேசீய சமூக சட்ட சேவை மையங்கள் அமைப்' (National Association of Community Legal Centres) புடனோ அல்லது உங்களுக்கு மிக அண்மையிலுள்ள 'சட்ட உதவி ஆணையத்' (Legal Aid Commission) துடனோ தொடர்பு கொள்ளுங்கள்.**

## 13.1 பாதுகாப்பு/புகலிடங்கள்/மொழி உதவி

**அவசர சேவைகள்**

**காவல்துறை, ஆம்புலன்ஸ், தீயணைப்பு**
தொலைபேசி: **000**

**இருப்பிடம் மற்றும் புகலிடம்**

**1800 656 463** எனும் எண் மூலம் **'இல்ல வன்முறை இணைப்'** (Domestic Violence Line) பினைத் தொலைபேசி மூலம் அழையுங்கள். காலி இடம் உள்ள மற்றும் உங்களது சூழ்நிலைக்கு மிகவும் ஏற்ற புகலிடத்துடனோ அல்லது உங்களை நாடி வந்து உங்களுக்கு அறிவுரையும், ஆதரவும் வழங்கும் சேவகர்களுடனோ இவர்கள் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தருவர்.

**மொழி உதவி**

**மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை**
**13 14 50** – உங்களால் ஆங்கிலம் நன்றாயப் பேச இயலாது என்றாலும், அறிவுரை-ஆலோசகர் ஒருவருடன் நீங்கள் பேச விரும்பினாலும் 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை'யை அழைத்து உங்களுக்குத் தேவைப்படும் சேவையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேளுங்கள்.

## 13.2 இல்ல/குடும்ப வன்முறை குறித்த இலவச குடிவரவு சட்ட உதவி

**குடிவரவு ஆலோசனை மற்றும் உரிமைகள் மையம் (Immigration Advice and Rights Centre Inc.)**
Level 5, 362 Kent Street, Sydney
Phone: **02 9262 3833** (ஆலோசனை இணைப்பு – செவ்வாய் மற்றும் வியாழன் 2 - 4 மாலை)
**02 9279 4300** (நிர்வாக இணைப்பு)
இணையதளம்: www.iarc.asn.au

இல்ல/குடும்ப வன்முறை உள்ளடங்க பல வகைப்பட்ட ஆஸ்திரேலியக் குடிவரவு, குடியுரிமை மற்றும் அகதியர் சட்ட விடயங்கள் குறித்து அறிவுரை-ஆலோசனை மற்றும் உதவி. இலவச தொலைபேசி மூலமான உதவி வழங்குகிறது மற்றும் சில தருணங்களில் சார்பு (representation) வழங்கலாம்.

**சட்ட உதவி – நி.ச.வே (Legal Aid NSW)**
Head Office, Ground Floor
323 Castlereagh Street
SYDNEY NSW 2000
தொலைபேசி: (02) **9219 5000** (குடிவரவு சட்டப் பிரிவுக்கு உள்ளதைப் போல)
தொலைநகல்: (02) **9219 5935**
TTY : (02) **9219 5126**

இலவச சட்ட அறிவுரை மற்றும் சார்பு வழங்குகிறது.

**குடியேறிய மகளிர் வெளிப்படைப்பேச்சு (Immigrant Women's Speakout)**
தொலைபேசி: **02 9635 8022**
ஆஸ்திரேலியக் குடிவரவுச் சட்டத்தில் உள்ள இல்ல/குடும்ப வன்முறைக்கான சட்டஉதவி வசதிகளைப் பயன்படுத்த விரும்பும் புலம்பெயர்ந்த மகளிருக்கு அறிவுரை-ஆலோசனையும், உதவியும் வழங்குகிறது.

## 13.3 பொதுப்படையான சட்ட உதவி (அதாவது, குடிவரவுச் சட்டம் சாராத விடயங்களுக்காக)

**இல்ல வன்முறை சட்ட சேவை (Domestic Violence Advocacy Service)**
Sydney Advice Line: **(02) 8745 6999**
கிராமப் புற இலவச அழைப்பு இணைப்பு: **1800 810 784**
செவிமடுப்புக் குறையுள்ள மகளிருக்கான TTY: **1800 626 267**

அறிவுரை ஆலோசனை இணைப்புகள் இயங்கும் நேரம்
காலை 9.30 – மாலை 12.30 மற்றும்
மாலை 1.30 – 4.30 மாலை திங்கள், செவ்வாய் வியாழன் மற்றும் வெள்ளி.

உரைபெயர்ப்பாளர் வசதி தேவைப்படும் மகளிர் 131 450 எனும் எண் மூலம் தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை அழைத்து உரைபெயர்ப்பாளரை (02) 9749 7700 என்ற எண்ணில் சேவையை அழைக்குமாறு கேட்கவும். சட்ட ஆலோசணைக்கென வக்கீல் ஒருவருடன் இவர் உங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்தி தருவர்.

**பொதுப்படையான சமூக சட்ட மையங்கள் (Generalist Community Legal Centres)**
உங்களுக்கு மிக அண்மையிலுள்ள 'சமூக சட்ட மைய'த்தைக் கண்டறிய **(02) 9264 9595** எனும் இலக்கத்தில் தேசீய சமூக சட்ட மையங்கள் அமைப்' (National Association of Community Legal Centres) பினை அழையுங்கள் அல்லது 'சமுக சட்ட மையங்கள்' தொகுப்பு அட்டவணையை (directory) www.naclc.org.au எனும் இணையதளத்தில் பாருங்கள்.

**நி.ச.வே சட்ட உதவி அணுகல் (LawAccess NSW)**
**1300 888 529** எனும் சட்ட உதவி இணைப்பு இலக்கத்தினை அழையுங்கள்

**நி.ச.வே சட்ட உதவி (Legal Aid NSW)**
(மேலே 13.2 – ஐப் பார்க்க)

## 13.4 தேசீய தொலைபேசி உதவி இணைப்புக்கள்

**ஆஸ்திரேலியா ஆடவர் உதவி இணைப்பு (Mensline Australia)**
**தொலைபேசி: 1300 78 99 78** – தமது உறவுகள் மீது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் தமது நடத்தைகள் குறித்து உதவி வேண்டும் ஆடவர்கள் உட்பட குடும்பம் மற்றும் தொடர்பு-உறவுகள் சம்பந்தப்பட்ட கஷ்டங்களில் உள்ள ஆடவருக்கு 'ஆஸ்திரேலியா ஆடவர் உதவி இணைப்பு' (Mensline Australia) உதவுகிறது. ஆடவருக்கும், ஆடவரது பொது வாழ்க்கை நலம் குறித்து கவலைப்படுவோருக்கும் ஆஸ்திரேலிய ஆடவர் உதவி இணைப்பு அநாமதேயமான தொலைபேசி உதவி, ஆடவருக்கான பரிந்துரைகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை உள்ளூர்த் தொலைபேசி அழைப்புக் கட்டணத்திற்கு நாளுக்கு 24 மணி நேரமும், வாரம் 7 நாட்களும் நாடு நெடுக அளிக்கிறது.

**'இல்ல வன்முறை மற்றும் பாலியல் தாக்குதல் குறித்த உதவி இணைப்பு' (National Domestic Violence and Sexual Assault Helpline)**
**தொலைபேசி: 1800 200 526** - இந்த இலவச அவசரத் தொலைபேசி இணைப்பு 24 மணி நேரமும் கிட்டும், மற்றும் வன்முறைக்கு ஆளாகும் எவருக்கும் அனுபவம் மிக்க அறிவுரை-ஆலோசகர் ஒருவருடன் இரகசியக் கலந்துரையாடலை இது உறுதி செய்கிறது.

**அவசர உதவி இணைப்G (LifeLine)**
**13 11 14**
www.lifeline.org.au

**குழந்தைகள் உதவி இணைப்பு (Kids Help Line)**
**1800 551 800** - இளம் வயதினருக்கு 24 அணி நேர இலவச குழந்தைகள் உதவி இணைப்பு ஏற்றதாய் இருக்கலாம்.
www.kidshelp.com.au

**தொடர்புறவுகள் ஆஸ்திரேலியா (Relationships Australia)**
**1300 364 277** – ஆஸ்திரேலியா நெடுக அறிவுரை-ஆலோசனை வழங்கல், சமரசம் செய்தல் மற்றும் இதர சேவைகளை Relationships Australia கடந்த 50 ஆண்டுகளாக வழங்கி வருகிறது.

## 13.5 அரசாங்கத் துறைகள்

**குடிவரவு மற்றும் குடியுரிமைத் துறை (Department of Immigration and Citizenship) -** துறையிடம் இருந்து தமக்கு வந்த கடைசி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு அதிகாரி (case officer)யுடன் விசா விண்ணப்பதாரிகள் தொடர்பு கொள்ளவேண்டும். மாறாக, **131 881** எனும் இலக்கத்தினை அழையுங்கள், அல்லது உங்களுக்கு மிக

அண்மையிலுள்ள திணைக்களத்தின் அலுவலகத்திற்குச் செல்லுங்கள் (முகவரிகள் துறையின் இணையதளம் www.immi.gov.au –வில் பட்டியலாய்த் தரப்பட்டுள்ளன).

**சென்ட்டர்லிங்க்** - (நெருக்கடி நேர வழங்கீடுகள் (crisis payment) விசாரணை இணைப்பு, தொலைபேசி: **131 021**)

**'குடும்பங்கள், வீட்டுவசதி, சமூக சேவைகள் மற்றும் பூர்விகக்குடி விவகாரங்கள் துறை' (Department of Families, Housing, Community Services and Indigenous Affairs) –** (இலவச உதவி இணைப்பு: **1800 200 526**)

IARC

# Immigration Advice and Rights Centre Inc.

ABN: 45 808 320 822
Community Legal Centre, established in 1986

Level 5, 362 Kent Street Sydney NSW 2000
Ph: +61 2 9279 4300 (Admin Line, 9-5pm)
+61 2 9262 3833 (Advice Line, Tues & Thurs 2-4pm)
Fax: +61 2 9299 8467
Email: iarc@iarc.asn.au
Web: www.iarc.asn.au

# நவம்பர் 2009, புதிய தகவல்கள்

## புள்ளிவிவரம்/சுருக்கவிவரம்

**குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தின் 2008-09 – ஆம் ஆண்டின் வருடாந்தர அறிக்கையின்படி DV/FV (குடும்ப வன்முறை) சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்கள் கீழ் வவருவனவற்றைக் காண்பிக்கின்றன:**

- தேசிய அளவில் DV/FV (குடும்ப வன்முறை) சம்பந்தமாக 708 கோரல்கள் (குடிவரவு விடயமாக) செய்யப்பட்டன.
- ஜுன் 30, 2009 அன்று குடிவரவு மற்றும் குடியுரிமைத் திணைக்களத்தினால் சென்ட்டர்லிங்க்-கிற்கு 98 பரிந்துரைகள் (DV/FV (குடும்ப வன்முறை) கோரல்கள் குறித்து சுதந்திர மதிப்பீட்டிற்கென) செய்யப்பட்டிருந்தன. இவை செய்யப்பட்டிருந்த DV/FV (குடும்ப வன்முறை) சம்பந்தப்பட்ட கோரல்களின் 15 சதவீதத்தினைக் குறிக்கும்.
- ஜுன் 30, 2009 வரையிலும் சென்ட்டர்லிங்க்-கினால் முடிவு செய்யப்பட்ட 82 பரிந்துரைப்புகளில் 45 பரிந்துரைகளில் DV/FV (குடும்ப வன்முறை) நிகழ்ந்துள்ளது எனவும், 37 நிகழ்வுகளில் DV/FV (குடும்ப வன்முறை) நிகழவில்லை எனவும் கண்டறியப்பட்டது.
- புலப்பெயர்வு மீளாய்வு மன்ற(Migration Review Tribunal)த்தினால் சென்ட்டர்லிங்க்-கிற்கு செய்யப்பட்டிருந்த 30 பரிந்துரைகளுள் 15 பரிந்துரைகளில் DV/FV (குடும்ப வன்முறை) நிகழ்ந்துள்ளது எனவும், 9 பரிந்துரைகளில் DV/FV (குடும்ப வன்முறை) நிகழவில்லை எனவும் காணப்பட்டது.

ஜனவரி 2009 –ல் இக் குறுநூல் வெளியிடப்பட்டதற்குப் பின்னர் அவுஸ்திரேலியக் குடிவரவுச் சட்டத்தில் சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அச்சிடப்பட்டுள்ள குறுநூலில் கீழ் வரும் தகவல்கள் இருக்காது என்பதை இக் குறுநூலைப் பயன்படுத்துபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்:

1. ஜுலை 1, 2009 – லிருந்து ஓர் பாலின சோடிகள் எதிர் பாலின சோடிகளைப் போலவே 'டி ஃபேக்டோ' (de facto partners - சட்டப்படி அல்லாத, ஆனால் இருக்கும் சோடிகள்) என ஏற்றுக் கொள்ளப்படுவதினால் உபபிரிவு 110, 310, 814, மற்றும் 826 பிரிவுகளைச் சார்ந்த ஒருவரையொருவர் சார்ந்து வாழ்பவருக்கான விசாக்கள் (interdependency visas) நீக்கப்பட்டுள்ளன. எனவே, 'de facto' உறவில் இருக்கும் எவ்வொருவரையும் போலவே (அதே தேவைகளைப் பூர்த்தி செய்தால்) ஓர் பாலின உறவில் இருக்கும் ஒரு விண்ணப்பதாரர் உபபிரிவு 820/801 அல்லது 309/100 விசாவுக்கென விண்ணப்பிப்பார்.

2. ஜூலை 1, 2009- லிருந்து அனைத்து ‘வாழ்க்கைத்துணை’ (Spouse) விசாக்களும் ‘உடன்வாழ் துணைவர்’ (Partner) விசாக்கள் என அழைக்கப்படும்.

3. நவம்பர் 9, 2009-லிருந்து குடும்ப வன்முறை (DV/FV) நிகழ்ந்த சமயத்தில் ‘உடன் வாழ் துணைவர்’ உறவு (partner relationship) தொடர்ந்து நீடித்திருந்திருக்க வேண்டியது சட்டபூர்வமாக தேவையாகும்.

4. நவம்பர் 9, 2009 – லிருந்து சட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன, எனவே குறிப்பிட்ட ‘விதிமுறை இலக்கங்களுக்கான குறிப்பீடுகள்’ (references to regulation numbers) சில சரியற்றதாக இருக்கலாம். எனினும் இந்த சட்டங்களின் தன்மைகள் மாறவில்லை (உதாரணமாக “ஏற்றுக்கொள்ளத் தக்க குடும்ப வன்முறை” எனும் பதத்தின் விளக்கம் விதிமுறை 1.23 (Reg 1.23) –லிருந்து விதிமுறை 1.21-க்கு மாறியுள்ளது, இருப்பினும் இதன் அர்த்தம் ஒன்றுதான்.)